# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



ஈரோடு மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை

நடவடிக்கைகள் முன்னிலை திரு. மரு. மணிஷ். நா, இ.ஆ.ப.,

ந.க.எண். இ1/1783/2024 நாள். 25/11/2024

பொருள் திட்ட அனுமதி – குடியிருப்பு மனைப்பிரிவு – ஈரோடு மாவட்டம் – ஈரோடு மாநகராட்சி ஈரோடு வட்டம், ஈரோடு சி கிராமம் ரீ.சர்வே எண். 1031/2A1, 2A3A,2A3B ல் உள்ள 0.44½ ஏக்கர் (அல்லது) 1801.00 ச.மீ பரப்பளவுள்ள உத்தேச குடியிருப்பு மனைக்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு அவர்களால் வரப்பெற்றது – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை

1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1, நாள்.08.09.2017.
2. அரசு ஆணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள். 04.05.2017.
3. வேளாண்மை இணை இயக்குநர், ஈரோடு அவர்களின் கடிதம் எண். அ4/15/2022(100), நாள்.18.03.2022.
4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(1) துறை நாள்.04.02.2019.
5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு அவர்களின் – தொழில்நுட்ப அனுமதி வழங்கியது DOQOF57F/2024/TCP நாள். 13.03.2024.
6. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின் ந.க.எண்.12483/2022/டிபி–2 நாள். 20.10.2022.
7. மாநகராட்சி / மின்பகிர்மான கழகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தானசாசன பத்திர எண்.1272 / 2024, 1271/2024 நாள்.27.02.2024.
8. மாமன்ற தீர்மானம் எண்.648 நாள்.25.10.2024.

***********

<u>உத்திரவு</u>

பார்வை 1, 2, 3, 4, 5, 6 மற்றும் 8 ல் காணும் கடிதங்களில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளை பின்பற்றி ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 4 க்குட்பட்ட வார்டு எண்.56, ஈரோடு சி கிராமம் ரீ.சர்வே எண். 1031/2A1, 2A3A,2A3B ல் உள்ள 0.44½ ஏக்கர் (அல்லது) 1801.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனையிடத்திற்கு ஈரோடு மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் மனைப்பிரிவிற்கு ம.வ/ஈமா எண்.70/2024 மற்றும் திட்ட அனுமதி எண். 10/2024 நாள். 13.03.2024 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைக்கு தானசாசன பத்திர எண்.1272/2024, 1271/2024 நாள்.27.02.2024 – ன்படி மாநகராட்சி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின் ந.க.எண்.12483/2022/டிபி–2 நாள். 20.10.2022. – ன் படி சாலைகள் அமைக்கப்பட்டு மற்றும் அடிப்படை வசதிகளுக்காக செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் செலுத்தியுள்ளதாலும், பின்வரும் நிபந்தணைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி வரைபடம் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்.

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 –இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.
2. மேற்குறிப்பிட்ட நிபந்தணைகளை நிறைவேற்றுவதற்கும் முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே Tamil Nadu Combined Devcelopment Building Rule 2019 ல் குறிப்பிட்டுள்ள Residential Use –ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
4. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயரழுத்த / மின்கம்பி பாதை / தந்தி கம்பி பாதை அமைந்தால் கம்பி பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.
5. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
6. மனுதாரர் குடியிருப்பு மனைக்கு தொடர்புடைய உள்ளாட்சியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
7. (அ) மேற்படி குடியிருப்பு மனைக்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவகத்தால் தொழில்நுட்ப அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. என்பதால் குடியிருப்பு மனைக்கு இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

   (ஆ) மேற்படி குடியிருப்பு மனைக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.
8. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நிலஉரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நிலஉரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.
9. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்ய பரிந்துரைக்கப்படும், மேலும், மாநகராட்சியால் வழங்கப்பட்ட இறுதி மனைப்பிரிவு ஒப்புதலும் ரத்து செய்யப்படும்.
10. விற்பணைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
11. தள பரப்பு குறியீடு எண். (FSI) TNCDBR 2009 – ன்படி அனுமதிக்கப்படுகிறது.
12. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
13. தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்பு சட்ட அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும்.

14. 1894–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நில சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக உள்ளாட்சி மற்றும் மனுதாரர்கள் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உடன்படின், அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

15. மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்கு பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம், குத்தகைப்பத்திரம், தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம், மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஈரோடு மாநகராட்சி பொருத்தமான அமைப்புகள் அல்ல.

<u>தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம் .</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | = | 0.44½ ஏக்கர் (அல்லது) 1801.00 ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் | = | 8 (எட்டு) மனைகள் |
| பொது ஒதுக்கீடுகள்<br>மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை | | |
| மனைப்பிரிவு சாலை பரப்பு | = | 473.17 ச.மீ (10%) பரப்பிற்கு (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது) |
| உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு தான ஆவண எண். 1271 / 2024 நாள்.27.02.2024. ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. | = | 11.25 ச.மீ (0.84%) |
| மூலை முடக்கு | = | 12.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50 மீ X 1.50 மீ விடப்படல் வேண்டும்.<br>12.0 மீ க்கு மேல் அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50 மீ X 4.50 மீ விடப்படல் வேண்டும். |
| கட்டிட வரம்பு | = | 9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்.<br>9.0 மீ க்கு மேல் 18.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.00 மீ விடப்படல் வேண்டும். |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை தான ஆவண எண்.1272.2024 நாள். 27.02.2024 ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. | = | 13.04 ச.மீ (0.98%) |

மனைப்பிரிவிற்கு தொகை செலுத்திய விபரம்

நகர் ஊரமைப்புத்துறை

| வ.எண் | செலுத்தப்பட்ட இனம் | தொகை ரூ. | நாள். |
|---|---|---|---|
| 1 | கூராய்வுக்கட்டணம் | 2,702/– | 11.01.2024 |
| 2 | திறந்தவெளி இடம் | 27,883/– | 29.02.2024 |
| 3 | நன்னிலை வரி | 4,500/– | 12.03.2024 |
| 4 | வளர்ச்சிக்கட்டணம் | 9,250/– | 12.03.2024 |
| 5 | விளம்பரபலகை கட்டணம் | 10,000/– | 12.03.2024 |

மாநகராட்சிக்கு தொகை செலுத்திய விபரம்

| வ.எண் | செலுத்தப்பட்ட இனம் | தொகை ரூ. | நாள். |
|---|---|---|---|
| 1 | கூராய்வுக்கட்டணம் | 1,000/– | 25.09.2024 |
| 2 | வைப்புத்தொகை | 1,00,000/– | 25.09.2024 |
| 3 | உட்பிரிவு கட்டணம் | 4,000/– | 25.09.2024, |

வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(1) துறையின் அரசாணை எண். 141 , நாள். 16.07.2022 – ன் படி மனுதாரரின் மனைபிரிவு உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை விதிகளை 5 ஆண்டு வரை அல்லது 60 சதவீதம் மனைகள் அபிவிருத்தி அடையும் வரை பராமரிக்கப்பட வேண்டும் என நிபந்தனை விதிப்பதுடன் மனைபிரிவு உரிமையாளரால் மேற்சொன்ன காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தவறும் பட்சத்தில் தாங்கள் செலுத்தி வைப்புதொகையிலிருந்து மாநகராட்சியால் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வைப்புத்தொகை ஈடுகட்டப்படும் எனவும் நிபந்தனை விதிக்கப்படுகிறது.

4/11/24

ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி.

4.11.24

இணைப்பு. ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைக்கான
வரைபடம் மற்றும் மனையின் நிபந்தனைகள்
ஒரு தொகுப்பு.

பெறுநர்.

திரு. எம். ஈஸ்வரமூர்த்தி,
24, இரகுபதிநாயக்கன்பாளையம்,
ஜீவானந்தம் வீதி,
ஈரோடு.

நகல் .

1. நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர் (பொ),
   ஈரோடு மண்டலம்,
   ஈரோடு.
2. சார்பதிவாளர், R1 இணை),
   ஈரோடு மாவட்ட சார்பதிவாளர் அலுவலகம்,
   ஈரோடு.



## our services doesn't just end there

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate